முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 630**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

20.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. கருணாமூர்த்தியே ஆறுமுக அரங்கா
கலியின்துன்பம் போக்கவந்த ஞானதேசிகா
ஆறுமுகன்என் அவதாரமாக வந்த
அரங்கனேஅரசனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
2. யானும் அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
உலகோரின் ஊழ்நீக்கி காக்கவேண்டி ஞானமாக
உயர்சக்தியாக வந்த அரங்கனே
உன்தர்மமும் சன்மார்க்கமும் இந்தஉலகை மீட்கும்
3. மீட்புதந்து உந்தனுள் யானிருக்க
மேலான அரங்கன்கரம்பட ஆசிபெற்றமக்கள்
மீட்புப்பெற்று இந்தகலியில் பாதுகாப்புபெறுவர்
மரணமில்லாத பெருவாழ்வும் அடைவர்
4. அடையவே அரங்கனை தொடர்ந்து
அகிலத்தில் கலியில் ஞானியர்கூட்டம்
வகையாக தேர்வுசெய்யப்பட இருக்க வல்லமைபட அரங்கன் பதம்பற்றி
வழிமொழிந்து அரங்கன் கொள்கைவழி வையகத்தில் தர்மம்செய்யும் மக்களெல்லாம்
5. மக்களெல்லாம் அரங்கன்வழி தேர்வுசெய்யப்பட்டு
வாழும் ஞானிகளாக உலகில் மாற்றம்பெறுவர்
தேக்கமின்றி அரங்கன் அவதாரமாக
திருஅருள்பட ஞானஆட்சி மலர
6. மலரவே ஞானியர்படை பெருகி
மண்ணுலகம் ஞானவான்கள் ஆட்சியாக மாறும்
வளரும் இந்தஉலகம் அமைதிபாதுகாப்புப்பட
வல்லமைபட ஞானிகள் ஆட்சியாக மலரும்
7. மலரவே ஞானவான்களை உருவாக்கும்
மகான்அரங்கன் சேவை உலகத்தால் ஏற்கப்பட
வளரும் உலகமே எந்த பேரிடருமின்றி
வல்லமைபட பாதுகாப்புப்பெற்று ஞானபூமியாக சிறக்கும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.